குறள்நெறி

-குறள்நெறி ஓங்கின் குடியரசு ஓங்கும்-

மின்னிதழ்:125-மாசி-17---தி.பி.2057 ஏப்பிரல்—1--- பொ.ஆ.2026

நிறுவுநர்: செந்தமிழ்மாமணி சி.இலக்குவனார்

வரலாற்றுப் பதிவு

இலக்குவனார் விருது: 19/12/2009 அன்று இலக்குவனார் நூற்றாண்டு விழாவில் நூறு தமிழறிஞர்களுக்கு விருது வழங்கிய நிகழ்வில் கலந்துகொள்ள இயலாத சிலருக்குத் தனியே சனவரி 2010-இல் வழங்கிய செய்தி [நன்றி:தினமணி]

விருது...

சென்னையில் ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றம் சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விழாவில் தமிழறிஞர் சி.இலக்குவனார் விருதை 'கவிதை உறவு' ஆசிரியர் ஏர்வாடி ராதாகிருஷ்ணனுக்கு வழங்குகிறார் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அவ்வை நடராஜன். உடன் (இடமிருந்து) மன்ற இணைச் செயலர் பு.சீ.கிருட்டிணமூர்த்தி, செயலாளர் கெ.பக்தவச்சலம், துணைத் தலைவர் மறைமலை இலக்குவனார், விருது பெற்ற கலசம் இராமலிங்கம், மு.ச.சிவம், மூத்த வழக்கறிஞர் காந்தி, செங்கைப் பொதுவன், பாவலர் புரட்சிதாசன், கவிஞர் பழனிபாரதி, கம்பன் கழகச் செயலர் இலக்கியவீதி இனியவன்.

இலக்குவனார் நூற்றாண்டு விழாவில் திராவிடர்கழகத் தலைவர் முனைவர் கி.வீரமணி அவர்கள் தொண்ணூற்று நான்கு தமிழறிஞர்களுக்கு விருது வழங்கினார்.விழா அமைப்பு;அண்ணா நகர்த் தமிழ்ச் சங்கம்,இலக்கிய வீதி &இலக்குவனார் அறக்கட்டளை

சிறப்பாசிரியர் குழு: முனைவர் பொற்கோ (முன்னைத் துணைவேந்தர், சென்னைப்பல்கலைக்கழகம்) முனைவர் இ.சுந்தரமூர்த்தி (முன்னைத் துணைவேந்தர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்) முனைவர் இர.பிரபாகரன் (மேரிலாந்து,அமெரிக்கா) முனைவர் அன்புசெயா (சிட்னி,ஆத்திரேலியா) பாவலர் முரசு நெடுமாறன் (மலேசியா) பேரா.மன்னர்மன்னன் (மலேசியா) பேராசிரியர் பெஞ்சமின் இலெபோ (பிரான்சு) கவிஞர் அழ.பகீரதன் (இலங்கை) கலாநிதி சயந்தினி விக்னராசன் (இலங்கை) பொறியாளர் ச.இராசகுமாரன் (அயர்லாந்து) எலியாசு (சிங்கப்பூர்)திருமதி.மதிவதனி பத்மநாதன் (சுவிட்சர்லாந்து) திருமதி.தாமரை சீனிவாசராவ் (கம்போடியா) முனைவர் இராம சுந்தரம் (கொரியா) தீனதயாளன்(கனடா) பேராசிரியர் தமிழியலன் (சென்னை) இணையாசிரியர்; பாவலர் செல்வ.மீனாட்சிசுந்தரம்

பொறுப்பாசிரியர்: மறைமலை இலக்குவனார்

நினையா நாளும் உண்டோ?

சேரன் செங்குட்டுவனின் வணங்கா வீரமும்
சோழன் கிள்ளியின் வேழநடையும்
பாண்டியன் வளர்த்த பைந்தமிழ்ப் புலமையும்
ஓருருக் கொண்ட ஒப்பிலா ஞாயிறே!
பள்ளியில் பயின்ற நாளிலிருந்தே
படைமறம் பூண்டனை மொழிப்போர்க்களத்தில்!
சாதியக் கொடுமை சமயக் காழ்ப்பு
சாடிய தந்தை பெரியார் நெறியும்
மறைமலை யடிகளின் தமிழியக்கமுமே
கண்கள் இரண்டாய்க் கருதினை அந் நாள்!
வாழ்நாளெல்லாம் போரில் கழிந்ததே!
வறுமை நெருப்பில் புடம் போட்டதனால்
சுடர்விடும் பொன்னெனப் பொலிந்தனையன்றோ?
வேலை கல்லூரியில் கிடைத்த வேளையும்
பணிநீக்கக் கொடுமை துரத்திய போதும்
சாலைக்கு வந்து தமிழ்ப்பணி புரிந்தாய்
ஊதியம் இன்றியும் உயர்தமிழ்ப் பணியில்
உவகை பெற்றனை ஊரூர் திரிந்து
வாய்க்கும் நாளெலாம் வள்ளுவப் பரப்புரை
சங்க இலக்கியச் சால்பு விரித்துரை
நிகழ்த்தும் பணியே நினதெனக் கொண்டனை!
இப்படி ஒருவரை இத் தரை கண்டதோ?
எங்கெங்கே துரத்தி எப் பாடுபட்டாலும்
அங்கங்கே அருந்தமிழ் மன்றம் நிறுவிக்
குறள்பொழி வாற்றலே கடனெனக் கொண்டாய்!
எழுத்தறிவு பெறாத் தொழிலாளருக்கும்
எழில்மிகு சங்க இலக்கியம் விளக்கினாய்!
பதவியும் ஊதியப் பேறும் வாய்த்தால்
இதழ்களை நடத்தியும் தமிழ்ச்சுடர் பரப்புவாய்!

இறக்கும்நாள் வரைக்கும் இதழ்ப்பணி நிகழ்த்திய
புலவர் உமைப்போல் வேறெவரும் உளரோ?
மாத்தமிழ் போற்றிடும் மாணவர் இயக்கமாய்
தமிழ்நலம் பரப்பிய தலைமைப் புலவரே!
மொழிப்போர் மூண்டு நெருப்பாய்ச் சுட்ட
துன்பச் சூழலில் துவண்டு விடாமல்
இடர்மிகு சிறையில் அடைத்த வேளையும்
படைபலம் காட்டிய அரசையும் எதிர்த்தே
மொழியுரிமைக் குரல் முழங்கிய சிங்கமே!
கெடல் எங்கே தமிழின் நலன்? அங்கே
தலையிட்டுக் கிளர்ச்சி செய்வேன் என்றே
போர்மறத்தில் நாள்போக்கிப் போய்ச்சேர்ந்தீர்!
இன்று உம் நினைவைப் போற்றாத தமிழர்
நன்றி மறந்தார் என்று வருந்தவில்லை!
போலித்தமிழர் பொல்லாங்குபல சூழ்ந்தே
நீலிக் கண்ணீர் வடிக்கும் நாடகமே
நாளும் தொடர்கிறதே நம் தமிழ்த்தாய்
ஆளும்நிலை மலராதா என்றே வருந்துகிறேன்.
அல்லல் மறைந்தே அருந்தமிழ் சிறந்திட
ஐயா உம்வழியில் தமிழர் இயங்கிட
மெய்யாய்த் தமிழ்நலன் சிறக்கும் என்றே
நினையா நாளும் உண்டோ?

இலக்குவனாரும் திருக்குறளும்

--மறைமலை இலக்குவனார்

உலகத்தமிழ்ச்சங்கம் நடத்தும் சீனக் கவிஞர் யூசி அறக்கட்டளையின் நான்காம் கருத்தரங்கம் “நவம்பரைச் சிறப்பித்த நால்வரும் திருக்குறளும்”'என்னும் தலைப்பிலமைந்து வீரமாமுனிவர், வ.உ.சி., கி.ஆ.பெ.விசுவநாதம், இலக்குவனார் ஆகிய தமிழ்ச்சான்றோர்கள் திருக்குறளுக்கு ஆற்றிய அரும்பணிகளை எடுத்துரைக்கும் நல்வாய்ப்பை வழங்கியுள்ளமை நன்றியுடன் போற்றத்தக்கது. தமிழ்நாட்டு அரசுக்கும் தமிழ்வளர்ச்சித்துறைக்கும் மாண்புமிகு அமைச்சர், செயலாளர், தமிழ்வளர்ச்சி இயக்குநர், உலகத்தமிழ்ச்சங்கப் பொறுப்பு இயக்குநருக்கும் உளங்கனிந்த நன்றி கூறி என் உரையைத் தொடங்குகிறேன்.

இலக்குவனாருக்கும் மதுரைக்கும் நெருங்கிய பிணைப்பு உள்ளமையை மூத்த தலைமுறையைச் சேர்ந்தவர்கள் நன்கறிவர்.மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராக 1959 முதல் 1965 வரை பணியாற்றிப் புகழ்மிக்க வரலாறு படைத்துள்ளார்.

1936-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்ட நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளிகளில் தமிழாசிரியப் பணி ஏற்றதிலிருந்து 1970-ஆம் ஆண்டு நாகர்கோவில் தென் திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி முதல்வராக அவர் ஓய்வு பெற்றதுவரை எந்த நிறுவனத்திலும் ஓராண்டு அல்லது இரண்டாண்டுகளுக்கு மேல் பணியாற்றியதில்லை. '”கெடல் எங்கே தமிழின் நலம் அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க””என்னும் குறிக்கோளுடன் போராட்டமே தம் வாழ்க்கைமுறையாக அவர் கொண்டிருந்தமையால் இவ்வாறு அவரது பணி அலைக்கழிப்புக்கு ஆளாகியது.அவர் மிகுதியான காலம் அஃதாவது ஆறாண்டுக் காலம் பணியாற்றிய ஒரே நிறுவனம் மதுரைத் தியாகராசர் கல்லூரிதான்.

அவர் பணியாற்றிய காலத்தில் மதுரைத் தியாகராசர் கல்லூரி “மதுரையின் ஐந்தாம் தமிழ்ச்சங்கம்” என்று போற்றப்பட்டது. பின்னாளில் புகழ்நிறுவிய பேராசிரியர்கள் சுப.அண்ணாமலை, தமிழண்ணல், கதிர்.மகாதேவன், ஔவை நடராசன் முதலியோர் அவர் காலத்தில் இளம் விரிவுரையாளர்களாகப் பணியாற்றி அவரால் உருவாக்கப்பட்டவர்களே. இன்றைய நாடறிந்த கவிஞர்கள் மீரா, நா.காமராசு, அபிபுல்லா, இன்குலாபு, மு.மேத்தா முதலியோர் அன்று அவர் மாணவர்களாகத் திகழ்ந்தவர்கள். மதுரை மகால் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் வாரம் தோறும் திருக்குறள் வகுப்பு நடத்தினார்.பிறரும் அவ்வாறு வகுப்பு நடத்தத் தூண்டுதலாக,ஒரு முன்னோடியாக விளங்கினார்.மீனாட்சி கோவில் வடக்காடி வீதியிலும் அவர் திருக்குறள் வகுப்பு நடத்தியுள்ளார்,.

திருக்குறளைப் பரப்புதற்காக வார விடுமுறை நாள்களில் பட்டிதொட்டியெங்கும் சென்று குறள் பொழிவுகள் நிகழ்த்தினார்.இன்னும் விரிந்து பரந்த அளவில் குறள் சென்று சேர்தற்காக “குறள்நெறி” என்னும் திங்களிருமுறை இதழை 1963-ஆம் ஆண்டு முதல் நடத்தினார். அதற்கு முன்னதாக அவரும் புதுக்கோட்டை அண்ணலார் பு.அ.சுப்பிரமணியனாரும் “குறள்நெறி“யை’த் தனிச்சுற்று இதழாகப் பல ஆண்டுகள்

நடத்திவந்தமையே இந்த இதழ் தோன்ற ஊக்கஊற்றாகத் திகழ்ந்தது என்பதையும் குறிப்பிடுதல் இவ் வரலாற்றை முழுமையாக்கும்.

“Kuralneri—The way of life” என்னும் தலைப்பைத் தாங்கிய ஆங்கில இதழையும் திங்களிருமுறையாக நடத்திவந்தார்.இந்தி எதிர்ப்புப் போராட்டத்தால் தமது பணியை இழந்த சூழலில் தமது குறள்நெறி இதழை நாளிதழாகவே நடத்தவும் துணிந்தார். இவ்வளவையும் இங்குக் கூறுவதற்குக் காரணம் அவர் மதுரையில் வாழ்ந்த காலம் தமிழியக்க வரலாற்றில் அவர் புதிய வரலாறு படைத்தற்கு மட்டுமின்றித் திருக்குறள்பணியிலும் முத்திரை பதித்த காலமாகத் திகழ்ந்தது என்பதனைச் சுட்டிக்காட்டவே எனலாம்.

இலக்குவனாரின் திருக்குறள்பணி அவர் திருவையாறு அரசர் கல்லூரியில் புலவர் வகுப்பு மாணவராகத் திகழ்ந்த பொழுதிலேயே தொடங்கிவிட்டது.அவர் வித்துவான் இடைநிலை வகுப்பு மாணவராக விளங்கிய காலத்தில்(1933) கல்லூரி விடுமுறை நாள்களில் தமது சொந்த ஊருக்குச் செல்வதை விடுத்து, பல்வேறு சிற்றூர்களுக்குச் சென்று குறள்வகுப்பு நடத்தினார்.அவருடன் துணையாகச் சென்று அத் தொண்டில் தங்களையும் ஈடுபடுத்திக் கொண்டவர்கள் (பின்னாளில் கல்லூரி முதல்வராகப் பணிபுரிந்த) அ.கிருட்டிணமூர்த்தி,முருகு இலக்குவன் என்னும் அவரது கல்லூரித்தோழர்கள் ஆவர்.

படிப்பு முடித்துப் பள்ளியில் ஆசிரியப்பணியில் ஈடுபட்டபின்பும் ஆண்டு தோறும் தாம் பணியாற்றிய பள்ளியில், பின்னர் கல்லூரியில் என்று இப் பழக்கம் இறுதிவரை தொடர்ந்தது நாகர்கோவிலில் தெ.தி.இந்துக் கல்லூரியில் முதல்வராகப் பொறுப்பு ஏற்றிருந்தபோது. 1957-ஆம் ஆண்டு திருவள்ளுவர் திருநாளைத் தமிழுலகு பாராட்டும் வண்ணம் சிறப்பாக நடத்தினார்.யானையின் மேல் திருக்குறள் நூலை இருத்தி முன்னே தேசிய மாணவர்படை அணிவகுத்துவரவும் யானையின் பின்னே நகர்ச் சான்றோர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் தொடர்ந்துசெல்லவும் சென்ற அந்த ஊர்வலம் தமிழ்நாட்டு வரலாற்றில் இன்றுவரை காண இயலாவண்ணம் தனித்தன்மை கொண்டதாகும்.இவ்வாறு சிறப்பாகத் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடுவதன் மூலம் மாணவர்கள் மட்டுமின்றிப் பெற்றோரும் மற்றோரும் திருக்குறளின் பெருமையை உணர வழிவகுக்கும் என்பது இலக்குவனாரின் கருத்தாகும்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டில் திருக்குறளை மக்கள் மன்றத்தில் பரப்பப் பெருந்துணை புரிந்தார்.

“தமிழ் இலக்கியங்களில் பெரிதும் பரப்பப்படவேண்டிய ஒரே நீதிநூல், அறநூல்,அறிவுநூல் திருக்குறள் தான் எனத் தந்தை பெரியார் கருதியே அதனை 1949-இல் (15,16/01/1949--இருநாள்கள்) தனி மாநாடு நடத்தி,மிகப் பெரும் தமிழறிஞர்களான நாவலர் ச.சோமசுந்தர பாரதியார், தமிழ்த்தென்றல் திரு.வி.க., பன்மொழிப்புலவர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், கா.அப்பாதுரையார்,ஏ.சக்கரவர்த்தி நயினார், கந்தசாமிப் புலவர்,திருக்குறள் வி.முனுசாமி போன்ற அறிஞர் பெருமக்களை அழைத்து இருநாட்கள் சென்னையில் குறள்மழை பொழியச்செய்த பின்பே திருக்குறள் புலவர்கள் வீட்டுப் புத்தக அலமாரிக்குள்ளே இருந்து பொதுமக்கள் மன்றத்தை அடைந்து,குறள் கருத்துப் பரவி ஒளிவீசத் தொடங்கியது.” (பெரியார் களஞ்சியம்-தொகுதி-37 பக்.iv)என்னும் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது.

இந்த மாநாட்டில் பேராசிரியர் சி.இலக்குவனார் அவர்களும் பங்கேற்றார்.
“விருதுநகர் செந்தில்குமாரநாடார் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் சி.இலக்குவனார் அவர்கள் குறள் மொழிப்படி திருக்குறளை அனைத்துலகுக்கும் எடுத்தோதி அதற்குச் சிறப்பை உண்டாக்கித் தர இப் பெரியார் ஒருவராலேயே முடியும் என்பதை உணர்ந்தே இயற்கையானது திருக்குறளை பெரியார் அவர்களிடம் ஒப்படைத்திருக்கின்றதென்றும், இயற்கை கூட வள்ளுவர் கட்டளைப்படியே நடக்கிறதென்பது வள்ளுவர்க்குப் பெருமை தருவதாகும்" என்று கூறியதாகவும் "அரசியல் நெறியை எடுத்துக் கூறும்போது கூட, வள்ளுவர் அறம் வழுவாது உயர் நெறிகளை எடுத்தோதி இருக்கிறார் என்றும், இன்றைய சர்க்கார் உண்மையிலேயே மதச்சார்பற்ற சர்க்காராக வேண்டுமானால், திருக்குறள் அதற்கேற்ற வழிகாட்டி என்றும் கூறி பழந்தமிழனான வள்ளுவன், புரட்சித் தமிழ் மகனான வள்ளுவன், சீர்திருத்தக்காரனான வள்ளுவன் எழுதிய குறளை யாவரும் படித்து அதன்படி நடந்து இன்ப வாழ்வு வாழ்தல் வேண்டும்" (பெரியார் களஞ்சியம்-பக்.334) என்று பேசியதாகவும் தெரிகிறது.
இம் மாநாட்டில் கலந்துகொண்டதுடன் நில்லாது தாம் பணியாற்றிவந்த விருதுநகரில் பேராசிரியர் சி.இலக்குவனார் மிகப் பெரிய திருக்குறள் மாநாடு நடத்தியுள்ளார்.அவர் விருதுநகரில் திருவள்ளுவர் மன்றம் நிறுவி அதன் செயலராகப் பொறுப்பேற்றிருந்தார் கல்லூரித் தாளாளர் வே.வ.இராமசாமி அவர்கள் அதன் தலைவராகத் திகழ்ந்தார்.
இம் மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்கள் “விருதுநகர் குறள் மாநாட்டுத் தீர்மானங்கள்”என்னும் தலைப்பில் பதினாறாம் இயலாக வெளிவந்துள்ளன.(பெரியார் களஞ்சியம்-தொகுதி-37பக்.102-103)இவை இங்குக் குறிப்பிடத்தக்கவை.
விருதுநகர் குறள் மாநாட்டுத் தீர்மானங்கள்
1) இப்பொழுதுள்ள கல்வித்திட்டத்தில் முதல் உயர்நிலைவகுப்பு (பாரம்) தொடங்கி இளங்கலைஞர்(பி.ஏ.)வகுப்பு முடிய திருக்குறள் முழுதும் படித்து முடிக்கும் வகையில் படிப்படியாகப் பாடம் வகுக்குமாறும் அதற்கெனத் தனி வினாத்தாள் (சேக்சுபியர் போல)ஏற்படுத்துமாறும் கல்வித்துறை அதிகாரிகளையும் பல்கலைக்கழகங்களையும் இம் மாநாடு வேண்டுகின்றது.
2) ஆட்சிமன்றங்களில் உறுப்பினராக வருவோர்க்கும் கல்விக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் தலைவராக வருவோர்க்குரிய தகுதிகளில் திருக்குறள் புலமையும் ஒன்றாக வற்புறுத்துமாறு ஆட்சியாளரை வேண்டுகிறது.
3) திருவள்ளுவர் விழாவுக்கென ஒரு நாளைக் குறிப்பிட்டு அரசு விடுமுறை நாளாக்கி அந் நாளை நாடெங்கும் கொண்டாடுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தாரை வேண்டுகிறது.
4)திருக்குறள் பற்றிய விழாக்கள் மாநாடுகள் முதலியவற்றின் நிகழ்ச்சிகளை அறிவிக்குமாறும் ஒலிபரப்புமாறும் திருச்சி வானொலி நிலையத்தாரைக் கேட்டுக்கொள்கிறது.
இந்த் நான்கு தீர்மானங்களும் விருதுநகர்த் திருவள்ளுவர் மன்றத்தாரால் நடத்தப்பட்ட திருக்குறள் மாநாட்டில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மட்டுமன்று. மாநாட்டை முன்னின்று நடத்திய பேராசிரியர் சி.இலக்குவனாரின் கனவுகள் என்றே கூறலாம்.

காலம் அவற்றை நிறைவேற்றிவைத்துள்ளது,காங்கிரசு ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டு அரசு வைகாசி அனுசம் நாளைத் திருவள்ளுவர் நாளாக அறிவித்தது. அறிஞர் அண்ணாவின் ஆட்சி அமைந்ததும் தை முதல் நாள் தமிழர் திருநாள் எனவும்த இரண்டாம் நாள் திருவள்ளுவர் திருநாளெனவும் கொண்டாடும் வழமை நிறுவப்பட்டு அதனை அரசு அறிவிக்கையாகக் கலைஞர் ஆட்சியில் 1969-இல் அறிவிக்கப்பட்டு அதன்பின் அரசு ஆணையும் பின்னாளில்வெளியானது.

"திருவள்ளுவர் திருநாள்" என்னும் பண்டிகையை தமிழர் யாவரும் கொண்டாட வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்து 1935 சனவரி 17ஆம் தேதி, இதற்கான கால்கோள் இட்டவர்கள், காழி சிவகண்ணுசாமிப் பிள்ளையும்,திரு.வ.சுப்பையாவும் ஆவர்.அவர்களின் முயற்சியில் "திருவள்ளுவர் திருநாட் கழகம்" எனும் கழகமொன்று அமைக்கப்பட்டு, தமிழகம், அயல் மாநிலங்கள், அயல் நாடுகளில் அதைக் கொண்டாடுவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

இந்த நெடிய வரலாறும் திருவள்ளுவர் ஆண்டு, தமிழ்ப்புத்தாண்டு தொடர்பான கருத்துமுரண்களும் இங்கு விரிக்கிற்பெருகும்.

"திருவள்ளுவர் திருநாள் தொடர்பான முன்மொழிவுகளிலும் முயற்சிகளிலும் முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்,ஈழத்தமிழறிஞர் கா.பொ.இரத்தினம் ஆகியோரின் முயற்சிகள் பதிவாயின.ஆனால் பேராசிரியர் சி.இலக்குவனாரின் முயற்சி ஆவணப்படுத்தப் படவில்லை.தமது போர்ப்பண்பால் பல்வேறு நிறுவனங்களுக்கு ஊரூராக அவர் அலைக்கழிக்கப்பட்டமையும் விருதுநகர்த் திருவள்ளுவர் மன்றத்தின் மூலம் அவர் மேற்கொண்ட முயற்சிகள் வரலாற்றில் பதிவுபெறாமல் போயினமையுமே காரணங்கள் எனலாம்.

ஆறாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை திருக்குறள் முழுமையும் மாணவப் பருவத்தில் அனைவரும் கற்கும் நிலை வரவேண்டும் என்னும் அவர் கனவு அக் காலத்திலேயே அவினாசிலிங்கம் அவர்கள் கல்வியமைச்சராகப் பொறுப்பேற்றபொழுது தொடக்கம் பெற்றது.

தமிழ்நாட்டு உயர்நீதிமன்றத்தில் மாண்பமை நடுவர் ஆர்.மகாதேவன் மாணவர்களை நல்வழிப்படுத்த வரும் கல்வியாண்டு முதல் திருக்குறளை முழுமையாகக் கொண்ட பாடத்திட்டத்தை நடைமுறைபடுத்த வேண்டுமெனப் பிறப்பித்த (27/4/2016) ஆணை இலக்குவனாரின் கனவை நனவாக்கியது.

மாணவர்களை நல்வழிப்படுத்தும் விதமாக வரும் கல்வியாண்டு முதல் 6 முதல் 12ம் வகுப்பு வரை திருக்குறளின் இன்பத்துப்பால் நீங்கலாக அறத்துப்பால் மற்றும் பொருட்பாலில் 108 அதிகாரங்களில் உள்ள அனைத்துக் குறள்களையும் பாடத்திட்டத்தில் சேர்த்துக் கற்பிக்க வேண்டும். இதற்கென தனியாக பாடத்திட்டத்தை உருவாக்க வேண்டும் என நடுவர் பரிந்துரைத்திருந்தார்.

அதன்விளைவாகப் பள்ளிகளில் குறள்பரப்பும் உயரிய தொண்டினை ஆசிரியர்கள் ஆற்றிவருகின்றனர்.

மலேசியாவின் பள்ளிகளில் திருக்குறளைப் பாடத்திட்டமாக சேர்க்க அந்நாட்டு கல்வித்துறையால் முடிவு செய்யப்பட்டுள்ளமை மற்றொரு திருப்புமையமாகும்.

‘வரும் கல்வியாண்டு முதல், 254 அரசு பள்ளிகளில் திருக்குறளை பாடத்திட்டமாக அமைக்க உள்ளோம். ஆரம்பப் பள்ளிகள் மட்டுமின்றி உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் இரண்டு பல்கலைக்கழகங்களில்

திருக்குறளை பாடத்திட்டமாகச் சேர்க்க உள்ளோம்.’ என மலேசிய நாட்டின் கல்வித்துறை இணை அமைச்சர் கமலநாதன் (15/3/2015) தெரிவித்துள்ளமை இனித் தமிழ்கூறு நல்லுலகெங்கும் குறள் பரவவேண்டுமென்னும் இலக்குவனாரின் கனவு நனவாகிய மகிழ்ச்சியை நல்குகிறது.

எல்லாரும் இந்நாட்டு அரசர், அமைச்சர் யார்?, திருக்குறள் எளிய பொழிப்புரை, வள்ளுவர் கண்ட இல்லறம் அல்லது காதல் வாழ்க்கை, வள்ளுவர் வகுத்த அரசியல் என்னும் தலைப்பில் குறளைப் பற்றிய பல நூல்களைப் படைத்த இலக்குவனாரின் முதல்நூல் “அமைச்சர் யார்” என்னும் தலைப்பிலான நூலாகும்.திருக்குறளின் அமைச்சியலை இக் காலச்சூழலுக்கேற்ப எழுதப்பட்ட இந் நூல் வெளிவந்ததும்(1949) இதனைப் படிக்காமலேயே சிலர் இதனைப் பற்றிய தவறான முடிவுக்கு வந்துள்ளனர். அப்போது நடந்துவந்த ஆட்சியைச் சார்ந்த அமைச்சர்களை இலக்குவனார் இந் நூலில் குறைகூறியுள்ளார் என்னும் தவறான முடிவுகொண்டு அப்போதிருந்த சென்னை மாகாண முதலமைச்சருக்குக் கம்பிச்செய்தி அனுப்பியுள்ளனர்.

“இலக்குவனார் கல்லூரிப்பணியிலிருந்துகொண்டே அரசியலில் ஈடுபட்டுவருகிறார். அமைச்சர்களைத் திறனாய்வு செய்து ஒரு நூல் வெளியிடும் அளவு துணிந்து பிழைசெய்கிறார். அவரை உடனே பதவியிலிருந்து நீக்கவேண்டும்.” என்பதே அவர்கள் விடுத்த கம்பிச்செய்தி.

அப்போது முதலமைச்சராயிருந்த குமாரசாமி ராசா அவர்கள் உடனே இலக்குவனாருக்கு இரண்டு ரூபாயை விரைவுப்பணவிடை (T..M..O).) மூலம் அனுப்பி அவரது நூலை உடனே தமக்கு (முதலமைச்சருக்கு) அனுப்புமாறு கேட்டிருந்தார். இலக்குவனாரும் அனுப்பிவிட்டார்.

இரண்டு நாள்கள் கழித்து முதலமைச்சரிடமிருந்து இலக்குவனாருக்கு மடல் வந்தது.” “உங்கள் நூலை முழுமையாகப் படித்தேன்.மிகச் சுவையாகவும் எளிமையாகவும் திருக்குறள் அமைச்சியலை அறிமுகப்படுத்தியுள்ளீர்கள் .பாராட்டுகள்.”என்று முதலமைச்சர் எழுதியிருந்தார்.

தமிழ்நாட்டு வரலாற்றிலே ஒரு நூல் வெளிவந்தவுடனேயே ஒரு முதலமைச்சர் விரைவுப்பணவிடை அனுப்பிப்படித்த நூல் ”அமைச்சர் யார்?” என்பது இலக்குவனாரின் குறள்பரப்பும் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி எனக் கூறவேண்டும்.

இந் நூலுக்குத் தமிழ்ப்பெரியார் திரு.வி.க. முகவுரை வழங்கியுள்ளார். திருக்குறளுக்கு இக் காலத்தில் புதுப்புது உரைகள் தோன்றிவருகின்றன. அவற்றுள் பொருந்திவருவன சிலவே. அச் சிலவற்றுள் ஒன்று இலக்குவனார் உரை என அவர் பாராட்டியுள்ளார்.இந் நூலுக்குக் கருத்துரை வழங்கிய குத்தூசி குருசாமி திருக்குறள் இங்ஙனம் புதுமையான முறையில் தொகுத்து அறிமுகப்படுத்தப்படுவது பாராட்டத்தக்கது எனக் கூறியுள்ளார்.

அமைச்சியலின் அதிகாரங்கள் வைப்புமுறை மாற்றப்பட்டு .1.அமைச்சு 2.சொல்வன்மை 3.அவையறிதல்4.அவையஞ்சாமை5.குறிப்பறிதல் 6.வினைத்தூய்மை 7.வினைத்திட்பம் 8.வினைசெயல்வகை

9.தூது 10.மன்னரைச்சேர்ந்தொழுகுதல் என்றிருந்தால் பொருத்தமாக் இருக்கும் என இலக்குவனார் ஆய்ந்துரைத்துள்ளார்.

இலக்குவனாரின் உரையையும் திருக்குறள்விளக்கநூல்களையும் ஆய்வுசெய்து புதுவைத் தமிழமல்லன் பினவருமாறு குறிப்பிட்டுள்ளார்.

“இவ்வாறாக இலக்குவனாரின் திருக்குறள் உரை பலவகைகளிலும் சிறந்து விளங்குகிறது.திருக்குறள் உரையை இலக்குவனார் பல்துறைப் புலமையோடு எழுதியிருக்கிறார்.பரிமேலழகர் உரையைச் சில இடங்களில் மறுத்திருக்கிறார். இலக்கணத்தின்துணையோடு பல குறட்பாக்களுக்கு விளக்கம் சொல்லியிருக்கிறார். திருக்குறளை இழிவுபடுத்தும் முயற்சியை அவர் தடுத்திருக்கிறார். தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவதும் சொல்லாய்வால் அதை உறுதிப்படுத்துவதும் இப்பணியில் நிகழ்ந்திருக்கின்றன. முறைவைப்பைச் சில இடங்களில் இலக்குவனார் மாற்றியிருக்கிறார்.”

“திருக்குறளுக்கு உரை எழுதிய அவர் வெறும் உரையாசிரியராக மட்டும் தோன்றவில்லை. மன்பதைநலத்தில் சிறந்த அக்கறை கொண்டவராகவும் காணப்படுகிறார். அதற்காக அவர் துணிச்சலாகத் தம் கருத்துக்களை ஆங்காங்கு வெளிப்படுத்தத் தவறவில்லை.”என்னும் தமிழமல்லனின் கருத்து இலக்குவனாரின் குறளாய்வுக்குப் பொருத்தமான மதிப்பீடாக விளங்குகிறது.

இலக்குவனாரின் திருக்குறள் ஆய்வு அணுகுமுறைகளாக இ.திருவள்ளுவன் கூறும் முடிபுகளைக் கூறி அவற்றின் வழி அவரது நூல்களைக் கற்றல் நமக்குக் குறளில் மேலும் ஆய்தற்குரிய வழிமுறைகளை விளக்கும்

1. எளிமை
2. நுண்மை
3. பகுத்தறிவுப் பார்வை
4. தமிழ் நெறிப் பின்புலம்
5. பெண்ணுரிமை பேணல்
6. உரையாளர் தவறுகளை நயம்பட மறுத்தல்
7. ஒப்புமைக் கருத்துகளைச் சுட்டுதல்
8. எக்காலத்திற்கும் ஏற்ற உரை
9. தனியர் தாக்குதல் இன்மை
10.கருத்தில் வன்மை
11.நடையில் மென்மை
12.வகுத்தும் தொகுத்தும் விவரித்தல்
13.சொல்விளக்கமும் இலக்கணக் குறிப்பும்
14. அறிவியல்பார்வை
15. புரட்சி எண்ணம்

இவையனைத்தையும் விளக்கிப் பின்னர் விரிவான நூல் எழுதுவேன்.அதற்குரிய தோற்றுவாயாக இந்த உரைவழங்கும் வாய்ப்பளித்தமைக்கு நன்றி.

“குறள்நெறி ஓங்கின் குடியரசு ஓங்கும் “என்னும் இலக்குவனாரின் முழக்கத்தோடு இந்த உரையை நிறைவுசெய்கிறேன்.(உலகத் தமிழ்ச் சங்கத்தில் வழங்கப்பட்ட எழுத்துரை)



முகவுரை

திருக்குறள் ஒரு சிறந்த வாழ்க்கை நூல். தமிழில் பிறந்தது; உலகத்துக்குரியது; சாதி, மதம், நிறம், மொழி, நாடு முதலிய வேற்றுமைகளைக் கடந்து நிற்பது. இத்தகைய நூலை மக்கள் வாழ்க்கையில் மருவுமாறு செய்ய வேண்டுவது பொதுமை விரும்புவோர் கடன்.

இந்நாளில் திருக்குறளுக்குப் புதுப் புது உரைகள் காணப்படுகின்றன. அவற்றுள் பொருந்தியன சிலவே. அச்சிலவற்றுள் ஒன்று தமிழ்ப் பேராசிரியர் "சி. இலக்குவனார்" உரை என்று கருதுகின்றேன். இவ்வுரையில் சில பகுதிகள் என் முன்னே படித்துக் காட்டப்பட்டன. அவை காலத்துக் குரியன என்று கண்டேன். மகிழ் வெய்தினேன்.

உரையாசிரியர் இலக்குவனார்க்கு எனது வாழ்த்து உரியதாக.

இராயப்பேட்டை,
22—11—'49.

திரு. வி. க.



கருத்துரை

ஆளுக்கொருவிதமாக நேரத்திற்கொருவகையாகப் பேசியும், நடந்தும் வருகின்ற அமைச்சர்கள் மலிந்துள்ள இக்காலத்தில் இச்சிறு நூல் வெளிவந்தது மிகமிகப் பொருந்தும். "ஜனநாயகம்" என்ற பெயரால் இன்று எவரும் அமைச்சராகலாம். எனினும், அப்பதவிக்குரிய திறமையைப் பெற்றிராவிடில் என்னாகும்? விடை நம் கண்முன்பே காணும்படி நிற்கிறதே!

அமைச்சராயிருப்பவர் சொல்வன்மை, அவையறிதல், அவையஞ்சாமை, குறிப்பறிதல் ஆகிய பல பண்புகளை உடையராய் இருத்தல் அவசியம் என்பது வள்ளுவர் கருத்து. அதை நல்ல முறையில், இக்காலத்து எடுத்துக்காட்டுகளுடன் எளிய நடையில் தந்திருக்கிறார் இலக்குவனார். ஒவ்வொரு குறளுக்கும் பதவுரையும் சிறப்புரை என்னும் தெளிவுரையும் இந்நூலிற் காணலாம்.

அமைச்சராயிருப்போரும், வரவிருப்போரும்மட்டுமே இதைப் படித்தாற் போதாது. குறளாசிரியரும் விளக்கவுரையாசிரியரும் அமைச்சர்பற்றிக் கூறுவதென்ன என்பதை அறிய விரும்பும் குடிமக்களும் படித்துணர வேண்டும்.

குறள் இம்மாதிரித் தொகுக்கப்படுவது முற்றிலும் புதிய முறையேயாகும். இதுபோன்றே வேறு சில தலைப்புக்களிலும் தொகுத்துத் தந்து தமிழ்ப்பணி செய்ய வேண்டியது கல்வி கேள்விகளிற் சிறந்த இந்நூலாசிரியரின் கடன்; அவர் முயற்சியை ஆதரிக்க வேண்டியது தமிழர் கடன்.

சென்னை,
28—12—49.

—சா. குருசாமி
"விடுதலை" ஆசிரியர்

தமிழ் உரிமைப் போராளி இலக்குவனாருக்குத் திருவுருவச் சிலை அமைக்கவேண்டுமெனக் கையெழுத்தியக்கம் நடத்திப் பன்னூறு கையொப்ப மடல்களை முதலமைச்சரின் முறையீட்டுப் பிரிவுக்கு அனுப்பி அரசு கருத்துரு அளவில் வெற்றிபெறக் காரணமாகிய பன்னூறு தமிழ்நெஞ்சங்களுக்கும் எம் மனமார்ந்த நன்றி.

முதல்வருக்கு மடல் விடுத்த பெரியோர் தோழர் இரா.நல்லகண்ணு அவர்களுக்கும் அவருக்கு உறுதுணை நல்கிய இந்தியப் பொதுவுடைமைக்குழு நிருவாகிகளுக்கும் தூண்டுகோலாக விளங்கிய பாரதி-பாரதிதாசன் மன்ற அமைப்பாளர் திருவை.பாபு அவர்களுக்கும் மனங்கனிந்த நன்றி.

படிமம் அமைப்பதும் மணிமண்டபங்கள் நிறுவுவதும் புகழுக்கு அளவுகோல்களாக நாம் கருதவில்லை.இலக்குவனாருக்குப் படிமம் இல்லாதால் அவர் பெருமையும் புகழும் குன்றிவிடாது.

யாரையும் குறைகூறிவிடுவது நமக்கு ஏற்புடையதல்ல.

எதிர்பார்ப்பு நிறைவேறாத் தருணங்களில் அமைதி காப்பதும் அடக்கம் பேணுவதும் இலக்குவனார் காட்டிய வாழ்வுநெறி.

அமைதி காப்போம். அடக்கம் பூணுவோம்.வெல்க தமிழ்.